மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி: 109 பகுதி: 12 டிசம்பர்-2015

திருவள்ளுவர் ஆண்டு 2046

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14.09.1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவ.. மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைநம்பி B.E. | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் M.B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. சங்கச் செய்திகள் 6

2. நீதிவெண்பா உணர்த்தும் தனிமனித வாழ்வியல் அறம் 9
க.அன்னலெட்சுமி (முனைவர்பட்ட ஆய்வாளர்)

3. இலக்கியம் காட்டும் நீர்வளம் 12
புலவர் சி.பாண்டுரங்கன், ஆம்பூர்

4. பட்டினப்பாலை பொ.வே.சோமசுந்தரனாரின் உரைநெறி 22
முனைவர் செ.ரவிசங்கர்

5. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம் 30
முனைவர் உ.கருப்பதேவன்

# இதழ் மணம்

இவ்விதழில் க.அன்னலட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர் என்பார் எழுதியுள்ள நீதிவெண்பா உணர்த்தும் தனிமனித வாழ்வியல் அறம் என்னும் கட்டுரையில் உணவுக்கட்டுப்பாடு மற்றும் பகுத்துண்டு பல காலம் வாழ்தல் மற்றும் இரந்துண்டல் இழிநிலை எனக்கூறி உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார் என்ற உயரிய நோக்கங்களை நீதி வெண்பா மூ லிகை தனிமனித வாழ்வியல் எடுத்துரைக்கப்படுவதை அறிய முடிகிறது.

இலக்கியம் காட்டும் நீர்வளம் என்னும் கட்டுரையில் புலவர் சி.பாண்டுரங்கன் கூறுவது, நீர்நிலைகள் செழித்து இருந்தால் அங்கு பல்லுயிர் பெருக்கமும் வாழ்வியலும் சிறக்கும் தன்மையை சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை பாடலாகும். நீர்வளம் பற்றித் தொகுத்துத் தந்துள்ளார். மேலும் அருவிகளின் அருகே உயர்ந்து செழுமையாக இருக்கும். கனி தரும் மரங்களையுமு, அதன்மீது படர்ந்து கிடக்கும் மிளகுக் கொடிகளையும் அவற்றைச் சுற்றி விளையாடும் விலங்கினங்களையும் பறவையினங்களையும் பற்றிய செய்திகளை பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை வளம் குறித்து ஆய்வு செய்துள்ளார் பாங்கு போற்றுதற்குரியது.

முனைவர் செ.ரவிசங்கர் அவர்கள் எழுதியுள்ள பட்டினப்பாலையில் பே.ா.வெ.சோமசுந்தரனாரின் உரைநெறி பற்றிக் கூறுகையில் அகலவுரை, சொற்பொருள் விளக்கம், அருஞ்சொற் பொருள் குறித்தும் பிற உரையாசிரியர்களின் கருத்துக்களிலிருந்து மாறுபட்டும் புதிய முறையில் சிந்தித்தும் உரைகண்டுள்ள பாங்கும் தமிழ்நாட்டில் அன்றைய காலக் கட்டத்தில் நிலவிய உழவின் சிறப்பும், கொண்டி மகளிர் நிலை பற்றியும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் பெ.வெ.சோ. உரையைப் பாராட்டும் வகையில் உரைமரபும் உரையின் தேவையும் பாட வேறுபாடும் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இதேபோல் பிற இலக்கியங்களின் உரைநெறியையுமு ஆராய இக்கட்டுரை வழிகாட்டுகிறது.

முனைவர் உ.கருப்பத்தேவன் எழுதியுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம் என்னும் கட்டுரையில் பொதுவாக உணவே மருந்த என்னும் பழந்தமிழரின் வாழ்க்கை முறையில் உடம்பை நெடிது உயத்தற்குரிய மருத்துக் கோட்பாடுகளைப் பற்றிய செய்திகளை நுட்பமாகக் கண்டுணர்ந்து கூறுகிறார்.

திருவள்ளுவர் மருந்தின்றி வாழ்வதற்குரிய மாற்று முறையாக தீ, காற்று, நீர் என்ற மூன்றையும் உடல்நலத்திற்கேற்ப சமன் செய்து வாழும் நெறிமுறையையும் உடம்பில் அழுக்கு நீக்கத்திற்குரிய செய்திகளையும் மருந்து என்ற அதிகாரத்தில் தொடர்ந்து வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர காமத்துப்பாலில்

**'உணவினும் உண்டல் அறலினிது காமம்**

**புணர்தலின் ஊடல் இனிது'** **(குறள்.1326)**

என்ற குறட்பாவில், உணவும் காமமும் இன்பம் தருபவை என்பதினின்றும் மாறுபட்டு அவற்றின் மறுதலையாகிய உணவு அறலும் ஊடலும் வலியுறுத்தப்பட்டிருப்பது உடலோம்புவார் சிந்திக்கத்தக்க நுட்பமான செய்தியாகும் என்பதனையும் தமிழர்களின் மருத்துவ முறைகளையும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நோய், நோய்க்கான காரணங்கள், நோய்களைக் குணப்படுத்தும் முறை, மருத்துவன் கடமை, மரபணுக்கள், மூலிகை மருந்தும் மருத்துவமும் என்பன குறித்த மருத்துவச் செய்திகள் பரவலாகப் பயின்று வந்துள்ளனவற்றை வெளிப்படுத்தியுள்ள பாங்கு பாராட்டுதற்குரியது.

# சங்கச் செய்திகள்

## மதுரைத் தமிழ்ச்சங்கம் - பெயர் மாற்றம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தை 1901ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ஆம் நாள் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தோற்றுவித்தார். முதல் சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் ஆகிய முச் சங்கங்களும் காலத்தால் அழிந்தாலும் 1901ஆம் ஆண்டு மதுரையில் தோற்றுவிக்சப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கமானது நூற்றாண்டுகளைக் கடந்து வ ்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தச் சங்கத்தினை நிறுவினாரோ அதே நோக்கத்துடன் தொடர்ந்து நமது சங்கம் தமிழ்ப்பணி ஆற்றி வருகின்றது. தற்பொழுது மதுரை மாநகரில் தமிழக அரசால் உலகத் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டு கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதனிடையில் வெவ்வேறு ஊர்கள் மற்றும் நாடுகளில் உள்ள சங்கங்கள் அந்தந்த ஊர் பெயர்களையே கொண்டு விளங்குகின்றது. மதுரைத் தமிழ்ச்சங்கம் என்று நமது சங்கத்தினை 1908அம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டப்படி பதிவு செய்துள்ள நிலையில் நமது சங்கத்தின் பாரம்பரியத்தையும், சிறப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் மேற்கூறிய காரணங்களினால் நமது சங்கத்தின் உண்மைத் தோற்றமான "**நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை**" என்று சங்கப் பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்வதென 09.12.2015ஆம் நாளில் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆட்சிக்குழுவில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இனிவரும் காலங்களில் மதுரைத் தமிழ்ச்சங்கம் என்பது **நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை** என அழைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ச.மாரியப்பமுரளி**

செயலாளர், நான்காம் தமிழ்ச்சங்கம்

## தமிழ்ச்சங்க நிறுவனர் நினைவு தினம்

2015 டிசம்பர் 2ஆம் நாள் மதுரை - நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 106ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு அன்று காலை தமிழ்ச்சங்கம் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்ச்சங்கப் பொதுக்குழு உறுப்பினர்கள், கல்லூரிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர்,

பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். பின்னர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பாண்டித்துரைத்தேவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் உரைநிகழ்த்தப்பட்டது.

## இலவச மருத்துவ முகாம்

வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 106ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு மதுரை நான்காம் தமிழ்ச்சங்கமும், வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து 09.12.2015ஆம் நாளன்று நடத்திய மருத்துவ முகாமில் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள் தலைமை தாங்கிட, கல்லூரிச் செயலாளர் இராணி இலட்சுமி குமரன்சேதுபதி அவர்களும், தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு ச.மாரியப்பமுரளி அவர்களும் முன்னிலை வகித்திட, மருத்துவ முகாமினை மதுரை மாநகராட்சி ஆணையாளர் திருமிகு சி.கதிரவன் இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்கள். தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் சமூக நல்லிணக்க மருத்துவர் டாக்டர் ந.சேதுராமன் அவர்கள் விழிப்புணர்வுக் கருத்துரை வழங்கிட, கல்லூரி முதல்வர் சு.விஜயன் அவர்கள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் ஏராளமான கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். பொதுமக்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## தமிழ்ச் சங்கத் தொடர் சொற்பொழிவு

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகிய தமிழறிஞர்களை அழைத்து இலக்கிய, இலக்கணம், வாழ்வியல் தொடர்பான சொற்பொழிவுகள் பிரதிமாதம் இரண்டாவம் சனிக்கிழமைகளில் தமிழ்ச்சங்க வளாகத்தில் நடைபெற்று வருகின்றன. அதனடிப்படையில் 12.12.2015ஆம் நாள் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் நிகழ்த்திய உரையின் தலைப்பு "நாகரீகமும் பண்பாடும்" என்பதாகும். இந்நிகழ்வில் தமிழ்ச் சங்கச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள், தமிழறிஞர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சொற் பொழிவினைக் கேட்டு மகிழ்ந்தனர்.

## அறக்கட்டளைகள் மற்றும் நினைவேந்தல்

முகவை மன்னர் பாஸ்கரசேதுபதி அவர்களின் 112ஆவது நினைவேந்தல் மற்றும் புதிய அறக்கட்டளை தொடக்கவிழா மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 28.12.2015ஆம் நாளன்று

நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரை நல்கிட, மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள் தலைமை தாங்கிட, கல்லூரிச் செயலாளர் திருமிகு. இராணி இலட்சுமி குமரன்சேதுபதி அவர்களும், தமிழ்ச் சங்கச் செயலர் திருமிகு ச.மாரியப்பமுரளி அவர்களும் முன்னிலை வகித்திட, விழாவில் செந்தமிழ்க் கல்லூரியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மேனாள் பேராசிரியரும், தமிழக அரசின் இளங்கோவடிகள் விருது பெற்றவருமான முனைவர் ஜி.டி.நிர்மலா அவர்களுக்கு, பாராட்டு விழாவும் நிகழ்ந்தது. இந்நிகழ்வில் சேலம் பெரியார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முதுமுனைவர் கி.முத்துச்செழியன் அவர்கள் பாராட்டுரை வழங்கினார். சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான K.R.N. கருணாகரன் அவர்கள் தமது பெற்றோர்கள் வழக்கறிஞர் K.R.நடராஜன் நாகம்மாள் பெயரில் அறக்கட்டளை துவக்க ரூ.50,000/ வழங்கியதைத் தொடர்ந்து புதிய அறக்கட்டளையை மதுரை வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன முதன்மையர் மருத்துவர் திரு அ.சீனிவாசன் அவர்கள் துவங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரித்துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரையாற்றினார்

## வருந்துகிறோம்



தமிழறிஞரும் மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியரும் நமது செந்தமிழ் இதழ் ஆசிரியர்களில் ஒருவருமான இராம.பெரியகருப்பன் என்ற தமிழண்ணல் அவர்கள் கடந்த 29.12.2015 அன்று இயற்கை எய்தினார். தமிழ்ச்சங்கச் செயலாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் திரளாகச் சென்று அன்னாருக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். நான்காம் தமிழ்ச்சங்கம் சார்பாக அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நீதிவெண்பா உணர்த்தும் தனி மனித வாழ்வியல் அறம்

**க. அன்னலெட்சுமி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**முன்னுரை**

நீதி வெண்பா என்னும் நீதிநூல் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்நூல் பலரால் எழுதப்பட்ட ஒரு தொகுப்பு நூலாக விளங்குகிறது. நூறு வெண்பாக்களைக் கொண்டது. நூல் முழுவதும் அறம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அறங்களை முறையாக வகுத்தோ தொகுத்தோ கூறாமல் கலம்பகம் போன்று கலந்து கூறப்பட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பாகும். திருக்குறளின் தாக்கம் இந்நூலில் நிரம்பக் காணப்படுகின்றது. இந்நூலை எழுதியோர் சைவசமயப் பற்றுள்ளவராக இருந்துள்ளனர்.

ஒவ்வொரு வெண்பாவும் ஒரு அறத்தினைப் போதிக்கிறது. தனிமனிதனுக்குத் தேவையான வாழ்வியலை அறத்துடன் உணர்த்து கிறது. நீதிவெண்பா உணர்த்தும் தனிமனித வாழ்வியல் அறத்தை எடுத்துரைப்பது இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**உணவுக் கட்டுப்பாடு**

மனிதனின் உடலையும் உயிரையும் வளர்ப்பது உணவு. அவ்வுணவை சீரான முறையில் உண்ணும் போது உடலும் உயிரும் வளம்பெறுகிறது. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்பார் திருமூலர். உணவு உண்ணும் வேளை குறித்து நீதிவெண்பா எடுத்துரைக்கிறது.

*''ஒரு போது யோகியே ஒண்தளிர்க்கை மாதே*
*இரு போது போகியே என்ப திரிபோது*
*ரோகியே நான்குபோ(து) உண்பான் உடல்விட்டுப்*
*போகியே என்று புகல்"* (நீதிவெண்பா, பா. 9.)

என்னும் வெண்பா தவநெறியில் வாழும் யோகிகள் ஒரு வேளை உண்ண வேண்டும். இல்லற நெறியில் வாழும் யோகிகள் இருவேளை உண்ணவேண்டும். இதைத்தாண்டி மூன்று வேளை உணவு உண்டால் உடலில் நோய் ஏற்படும். நான்கு வேளை உணவு உண்டால் இறப்பு ஏற்படும் என்கிறது. நீதிநெறி விளக்கம் துறவிகள் குறைந்த உணவையே

உண்பர் எனக் குறிப்பிடுகின்றது.

நல்வினைப்புரிய குறைந்த உணவையே உண்ண வேண்டும் என்கிறது அறநெறிச்சாரம். மிதமிஞ்சிய உணவு சோம்பலையும் தூக்கத்தையும் கொடுக்கும். ஆத்திச்சூடி அளவுக்கு அதிகமாக உணவு உண்ணக்கூடாது என்கிறது.

*''எள்ளலில் சிற்று ணாவற் றுடலெங்கு*
*மியங்கு மாலோ''* (நீதிநூல், பா. 2.)

என்னும் நீதி நூல் பாடல் வரிகள் சிற்றுணவு உடலுக்கு வலிமை தரும் என்கிறது.

**தனித்து உண்ணக்கூடாது**

உணவு உண்ணும் போது தான் மட்டும் உண்ணாமல் பிறருக்கும் கொடுத்து உண்ண வேண்டும்.

*''பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''* (திருக்குறள், 322)

என்கிறது திருக்குறள்.

*''......... ......... .........*
*......... ......... .........*
*தக்கவரை இன்றித் தனித்துண்டல் தான் கவர்மீன்*
*கொக்(கு) அருந்தல் என்றே குறி''* (நீதிவெண்பா, பா.49)

என்னும் நீதிவெண்பா, தனித்து உணவு உண்பதை கொக்கு தான் கவர்ந்த மீனை உண்பதற்கு ஒப்பானது என்கிறது. எனவே தனித்து உணவு உண்ணக்கூடாது. உணவைப் பகிர்ந்து உண்ணும் போது உள்ளத்தில் அறஉணர்வு ஏற்படும்.

தனித்து உணவு உண்ணாமல் பிறருக்கும் உணவினைக் கொடுத்து உண்ண வேண்டும் என்பதை,

*''விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை*
*இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணாரே யென்றும்*
*ஒழுக்கம் பிழையா தவர்''* (ஆசாரக்கோவை, பா.21)

என்னும் ஆசாரக்கோவை பாடல்வரிகளும் உணர்த்துகின்றன. சிறுபஞ்சமூலமும் நறுந்தொகையும் உணவைப் பகிர்ந்துண்ண வேண்டும் என வலியுறுத்துகின்றன. சுத்தானந்த பாரதியார் இயற்றிய புதிய ஆத்திச்சூடியான பொது நெறி சோற்றைப் பகுத்துண் என்கிறது.

***இரப்பது இழிவு***

தனிமனித வாழ்வில் இரந்துண்ணாமல் வாழ்வது மேன்மையானது. இரப்பது மிகவும் இழிவானது. இரப்பவனின் நிலையை நீதிவெண்பா இழித்துரைக்கிறது.

*"நொய்தாம் திரணத்தின் நொய்தாகும் வெண்பஞ்சின்*
*நொய்தாம் இரப்போன் நுவலுங்கால் - நொய்யசிறு*
*பஞ்சுதனின் நொய்யானைப் பற்றாதோ காற்றணுக*
*அஞ்சுமவன் கேட்ப தறிந்து"* (*நீதிவெண்பா, பா.9*)

என்னும் வெண்பா பிச்சையெடுப்பவன் மிகச்சிறிய துரும்பைவிட கனமில்லாத பஞ்சைவிட எளியவன். அவனைக் காற்றுக்கூட நெருங்காது. ஏனெனில் அந்தக் காற்றிடமும் அவன் பிச்சைக் கேட்பான் என்பதால் என்று குறிப்பிடுகிறது.

ஆத்திசூடி இரப்பதை *''ஏற்ப திகழ்ச்சி''* (*நீதிக்களஞ்சியம், ப.648*) என்கிறது.

*முதுமொழி ''இரத்தலி னூஉங் கிளிவர வில்லை''*

(*நீதிக்களஞ்சியம், ப.647*)

என இரப்பதை இடித்துரைக்கிறது.

**முடிவுரை**

மனிதன் அளவான உணவையே உட்கொள்ள வேண்டும். இது உடல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். ஆரோக்கியமான மனிதனால் மட்டுமே தன்னிறைவான வாழ்க்கையை வாழமுடியும். இல்லறத்தோடு வாழக்கூடியவர்களுக்கு இருவேளை உணவே ஏற்றது என்பதை நீதி வெண்பா வழி அறியப்பட்டுள்ளது. உண்டிகொடுத்தாரை உயிர் கொடுத்தார் என்பர். உணவு உயிர்வாழ மூலக்காரணியாக அமைகிறது. அப்படிப்பட்ட உணவைத் தனித்து உண்ணாமல் பிறருக்குக் கொடுக்கும் போது அவரது உயிரை வளர்ப்பதில் நாமும் உதவினோம் என்ற மனநிறைவு ஏற்படும்.

ஒரு மனிதன் தன் மானத்தோடு வாழவேண்டுமென்றால் பிறரிடம் இரக்காமல் இருக்க வேண்டும். இரப்பதை இழிவாகக் கருதினாலே மனித மனம் ஆசையிலிருந்து விடுபட்டு நல் வழியில் நடக்கும். எனவே நீதி வெண்பா இரந்து வாழ்பவர்களை எள்ளி நகையாடி அவர்களது இயல்பை இழித்துரைக்கிறது. நீதிவெண்பா உணர்த்தும் உணவுக் கட்டுப்பாடு, தனித்து உண்ணக்கூடாது, இரப்பது இழிவு என்னும் அறங்கள் தனிமனித வாழ்வியலுக்குக் கூறப்படும் நல்லறங்களாகும். இவற்றைப் பின்பற்றினால் உடலும் மனமும் பண்படும்.

# இலக்கியம் காட்டும் நீர்வளம்

புலவர் சி.பாண்டுரங்கன், ஆம்பூர்

## சென்ற இதழின் தொடர்ச்சி

**பத்துப்பாட்டில் 'அருவி' நீர்வளம்:**

**பத்துப்பாட்டு ர ால்கள்:**

'முருா . பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகுவள மதுரைக் காஞ்சி - மருவினிய
கோல நெடுநல் வாடைகோல் குறிஞ்சி
கடாஅத் தொடும் பத்தே'

ஈற்றயல் தவிர மற்ற ஒன்பது நூல்களில் அருவி நீர்வளத்தைப் போற்றுகின்ற பல கருத்துகள் உள. அவற்றை, நிரலுறக் காண்போம்:

**திருமுருகாற்றுப்படை:**

குமரவேளை, மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய இந்நூலில், நிறைவுப்பகுதி, அருவிக் காட்சியும் அழகிய இயற்கையின் அற்புத வளமும் தன்னகத்தே கொண்டு, மிளிர்கின்றது.

அருவிகளின் தொகுப்பு, தாவரங்களின் செழிப்பு, விலங்கு மற்றும் பறவையினக் கொண்டாட்டம், பொன் மணிகளின் கிடைப்பு, சிலம்பாற்றருவியின் பெருமை என, பாவும் ஊடுமாய்ப் பின்னிப் பொலிவுறும் பா அடி 295-317:

*". . . . . . . . . . . . . . . . . . . . பலவுடன்*
*வேறுபல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து,*
*ஆர முழுமுதல் உருட்டி வேரல்*
*பூவுடை அலங்கு சினை புலம்ப, கருங்கோட்டு*
*ஆமா நல்ஏறு சிலைப்ப, சேண்நின்று*
*இழுமென இழிதரும் அருவி,*
*பழம்முதிர் சோலை மலைகிழ வோனே!*

என்கிறது திருமுருகாற்றுப்படை.

**முக்கியச் செய்திகள்:**

முருகன், பழமுதிர்சோலை மலைகிழவோன். இம்மலையில் பலவாகிய அருவிகள் கிழிந்து நீர் வளம் ஓங்கச் செய்கின்றன. அருவிகள் ஒன்றாய் இணைந்து பேராற்றலுடன் ஓடும் அழகினை உணர்த்தும்

முகத்தான், வளம்பெற்றுச் செழித்த மர வகைகள், வாழ்வியல் சிறந்த விலங்கினங்கள், பல்லுயிர்ப் பெருக்கத்தின் பட்டியலை விரிவாக்கும் ஒப்பிலாப் பறவை இனங்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்யும் அழகே அழகு! படிக்கப் படிக்கத் தெவிட்டாத, தேன்சொட்டும் தமிழ்ப்பா.

**அருவிநீர் வளத்தால் ஓங்கிய மரவகை:**

கனிமுதிர்ந்து வெடித்து மணம் கமழ்சுளை அருவியில் வீழச் செழித்த ஆசினிப்பலா, வாழை, தென்னை, அகில், சந்தனம், மலர்கள் குலுங்கும் சுரபுன்னை, இவை உட்பட மரவகை.

**அருவிநீர்வளம் தரும் பிறதாவரங்கள்:**

மூங்கில்வகை, மிளகுக் கொடி மிகக்கிடந்தன. அருவிக்கொடையாம் பல்லுயிர்ப் பெருக்க விலங்கினங்கள்; பறவையினங்கள்; வரைத்தேன் இழைக்கும் தேனீக்கள் செழிப்பாக வாழ்வதனால், அவற்றின் வாழ்வாதார புல்; இலை, தழை, பூ, காய், கனி தரவல்ல செடி, கொடி, மரவகைகள் அடர்ந்து விரவி நெடிதுயர்ந்து செழித்திருந்ததை உணரலாம். உச்சிமலைத் தேன் இறால் அருவியில் விரவி வந்த நிலை, மலைச்சாரல் மலர்ச்செடிகள் நிறைந்ததெனக் காட்டும் சான்றாகிறது.

**ஒப்பு நோக்கல்:**

"....  ....  .... *சாரல்*

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு,**

**பெருந்தேன் இழைக்கும் நாமினாடு நட்பே!"** -குறு.3

நிறைவுவரியிலுள்ள 'பழம் முதிர் சோலை' எனும் தொடர், பலவகையான கனிமரங்களின் ஈட்டத்தைக் காட்டுகிறது.

**அருவிச்சிறப்பால் அங்கு வாழ்ந்த விலங்கினங்கள்:**

கருங்குரங்கினம், முசுக்கலை, யானைகள், கேழல் மற்றும் கரடி, காட்டுமா இனம் போன்றன. அருவிநீர் அடித்துக் கொண்டோடிய பொருள்களில், பொன், மணி, முத்துஉடைய வான்கோடு" இருந்ததால், பெருங்களிறுகள் நெடிய காலம் வாழ்ந்தநிலை உணர்த்தப்படுகிறது; சூழல் மேம்பாடும் சிறந்தநிலை தொடர்ந்தது.

**அருவி பாயும் பகுதியில் வாழ்ந்த பறவைகள்:**

இருபுறமும் மடநடையுமுடைய மயில்களும், வலிவுடைய கோழிகளும் அங்கு வாழ்ந்தன. இவ்விரண்டையும், நெடுவேளின் ஊர்தி மற்றும் கொடி என்னும் சிறப்பு பற்றி கூறியதால், பிற பறவைகளும் அங்கு வாழ்ந்தன எனக் கொள்ளலாம். சோறு உண்டான் என்னும் தொடரில் சோறு என்பது, காய்கறி, பொரியல், துவையல், சாறு, மோர், ஊறுகாய்,

பணியார வகைகளைக் குறிப்பதை ஈண்டு நினைக. **இப்பாட்டில், மயில், கோழி சிறப்பித்துப் பாடப்பட்ட இடங்கள்:**

**'கோழி ஓங்கிய வென்றுஅடு விறற்கொடி**

***வாழிய பெரிது...'*** **- 38, 39**

**பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ - 122**

**மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு - 206**

**. . . . . மஞ்ஞையன், புகர்இல் சேவல் அம் கொடியன் - 210,211**

மேலு! , அருவி நலத்தை, அடி 240 பாடும்.

எனவே, அருவிகள் சிறந்தால், அகிலமே செழிக்கும் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனி அன்றோ?

**பொருநர் ஆற்றுப்படை:**

மலையருவி நீர், ஓரறிவு உயிராகிய புல் முதல், ஆறறிவு பெற்ற மாந்தரினம்வரை, வளமுடன் வாழ உதவிக்கரம், நீர்க்கால் நீட்டுகின்றது. ஆயினும், மலையருவியும் வற்றிப்போவதேன்? அறிவியல் ஆய்வு வினாவான இதற்கு, அறிவியலில் அரிச்சுவடி உலகில் தோற்றம் கொண்ட மிகப்பழைய காலகட்டத்திலேயே, விடையளிக்கும் முயற்சியை இலக்கியம் பதிவு செய்துள்ளது.

**சான்று:**

மன்னர் நடுங்கத் தோன்றி, பல்மாண் எல்லை தருநன் பல்கதிர் பரப்பி, வெம்மை மிகுந்தால் என்னவாகும்?

வறகடம் தோன்றும்/ பஞ்சம் உண்டாகும்/ மழை குறையும்/ பொய்க்கும்; மலையருவி வற்றும்.

*". . . அருவி மாமலை நிழத்தவும், மற்றுஅக்*

*கருவி வானம் கடற்கோள் மறப்பவும்,*

*பெருவறன் ஆகிய பண்புஇல் காலை. . ."* *-பொறுநர்.235-237.*

**சிறுபாண் ஆற்றுப்படை:**

பாரி, வள்ளல்; பறம்பு மலைக்குத் தலைவன். அம்மலை, வண்டுகள் உண்ணும் தேன்சிந்தும் நறுமண மலர்கள் நிறைந்த சுரபுன்னை மரங்கள் நிறைந்த, தேரோடும் நெடுஞ்சாலைகளை உடையது. அந்த நெடிய வழியில் நின்ற சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடிக்குத் தன் தேரைக்கொடுத்த வள்ளல் பாரி. மலைச்சாரல்களில், வெண்மையான அருவிகள் பாயும். (சுரபுன்னை மலர்கள் தேன் கொடுக்கவும், பரிவோடு பாரி, முல்லைக் கொடி பற்றிப்

படரத் தன் தேரைக்கொடுக்கவும், அருவி நீரைக் கொடுக்கவும் என நிகழ்வுற்ற மூன்றிலும் பொதுமை, கொடை!

*" . . . . . . . . . . . . . . . . சுரும்புஉண*
*நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்*
*சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய,*
*பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்*
*பறம்பின் கோமான் பாரி. . . . ."* *(சிறுபாண் 87-91)*

பிறங்குதல் = ஒலித்தல்; ஒளிர்தல்; மிகுதல்; செறிதல்; உயர்தல்; நிலைமாறுதல்.

**ஒப்புநோக்கு உவகை:**

*பிறங்கு வெள்அருவி: புற. 158:3, 252:1*
*கறங்குமிசைஅருவி: புற.148:1*

**வேலூர் அருவி:**

'விடர்கால் அருவி' என, வேலூர் அருவி சிறப்பிக்கப்படுகிறது.

வேலூர், வெம்மை மிகுந்த பகுதியாக உணரப்பட்டது. வெம்மையை ஆற்றிக்கொள்ளும் வகையில் இருந்த, இயற்கைக் காட்சி களும் அருவிச்சிறப்பும் எடுத்துரைக்கும் பாடற்பகுதி நயம் மிகுதி கொண்டதாகும். கார்பெயலுக்கு அறிகுறிகள் சுட்டப்படுகின்றன. அருவிப் பெருக்கால் சிறந்த இயற்கை வளம் இருப்பதை உணர்த்துகிறது.

**பெரும்பாணாற்றுப்படை:**

**அருவியின் செயல், உவமை ஆதல்...:**

மலையருவி, அம்மலையிலுள்ள பண்டங்களை எடுத்துக் கொண்டு போய்க் கடலுக்குக் கொடுக்கிற இயல்பு, காஞ்சிபுரம் தொண்டைமான் இளந்திரையனைக் கண்டு நட்புகொள்ளக் காத்திருக்கும் மன்னர்களின் இயல்புக்கு உவமையானது.

**"... கல்வீழ் அருவி கடற்படர்ந் தாங்கு**
***பல்வேறு வகையின் பணிந்த மன்னர்..."***

**இளந்திரையனது மலையின் அருவி:**

இளந்திரையனது மலையின் பெருமையைக் கூறும் பாட்டு, நிறைவு வரியில், மலையருவியைச் சிறப்பிக்கின்றது இப்படி:

**"...ஒளிறு இலங்கு அருவிய மலைகிழவோனே!" (பெரும்பாண், 500)**

**முல்லைப்பாட்டு:**

**அருவியை நினைவூட்டும் அரண்மனை மழைநீர்!**

கார்காலத் தொடக்கத்தில் வருவதாகக் கூறிப் போரின் நிமித்தம் பிரிந்து சென்றான் கணவன். அவன் குறிப்பிட்ட கார்காலம் தொடங்கிய நிலையில், தலைவியின் நிலையைப் பாட்டில் வைத்த புலவர் பின்வரும் கருத்தையும் நவின்றார்:

பொற்பாவை ஏந்திய விளக்கில் சுடர் ஒளிர, பொன்மணிகளால் சிறந்த ஏழடுக்கு மளிகை பொலிவு பெற்றது. மழையான அருவி, கூரை கூடுமிடத்தில் சொரிதரும்; இனிய இசைபோல் மகிழ்வூட்டும் அவ்வொலியும், உட்செவி ஆரவாரிக்கும் ஒலிபல கேட்டபடி இருந்தாள்; தேர்பூண்ட மா ஆலின! வான்மழை, அருவியாக, இன்னிசை அருவியாக உரைக்கப்பட்டது:

**"…. பாவை விளக்கில் பருஉச்சுடர் அழல,**
**இடம்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து,**
**முடங்கு இறைச் சொரிதரும் மாத்திரள் அருவி**
**இன்பல் இமிழ்இசை ஓர்ப்பனள் கிடந்தோள்**
**அஞ்செவி நிறைய ஆலின. . . ."** **(முல்லை., 85-89)**

**மதுரைக் காஞ்சி:**

இப்பாட்டில், 'அருவி' என்னும் சொல்லாட்சி ஐந்து இடங்களில் அமைந்துள்ளது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை, மாங்குடி மருதனார் பாடியது.

தென்னவன் என்னும் பெயர் கொண்ட, பழைமையும் பெருமையும் மிகு கடவுளாம் சிவபெருமானின் வழிவந்த பக்கமலையில் விழுகின்ற அருவியையுடைய அகத்தியரின் பொதியமலைக்குத் தலைவனாகிய, அரசே!

**". . . தென்னவற் பெயரிய, துன்அருந் துப்பின்**
**தொல்முது கடவுட் பின்னர் மேய,**
**வரைத்தாழ் அருவிப் பொருப்பின் பொருந!..."**

**(மதுரைக்காஞ்சி, 40-42)**

**இலங்கு அருவிய வரை நீந்திய சிறப்பு:**

சேரனையும், சோழனையும், வேளிரையும் குறுநில மன்னர் பலரையும் (பறந்தலை எழுவர் நல்வலம் கடந்தோய்: புற.19) வென்றும் அமையாது, குறிஞ்சிநில வேந்தர் பலரையும் போர் முனையில் வென்ற,

ஆற்றலும் சிறப்பும் உடையவன்... அக் குறிஞ்சி நிலப் பகுதிகள், சிறந்த மலையருவிகளால் செழித்தவை:

**"... இருபெரு வேந்தரொடு, வேளிர் சாயப்**
**பொருது, அவரைச் செருவென்றும்,**
**இலங்கு அருவிய வரைநீந்தி**
**சுரம் போழ்ந்த இகல் ஆற்றல்,**
**உயர்ந்து ஓங்கிய விழுச்சிறப்பின்..." (மதுரைக், 55-59)**

**இலங்கு வெள்அருவியொடு சிலம்பகத்து இரட்டல்:**

ஒலி அளவுமானி, அறிவியலின் கொடையாகி, உலக மாந்தரின் நலனுக்கு உதவுகிறது. இன்று! (இந்நாள்.) சிலவகை ஆரவார ஒலிகளின் கூட்டளவோடு ஒப்பிட்டு, சார்த்தி அளந்து, ஒரு புதிய முயற்சியில் முதலடியை எடுத்து வைத்தார் இப்பாட்டாசிரியர், அன்று! (அந்நாள்).

1. தினை கவ்வப்படியும் கிளியை ஓச்சும் ஒலி.

2. மணிபோன்ற மலர்நிறை அவரைப் பயிரை மேய அங்குவரும் காட்டுப் பசுவை விரட்டும் கானவர் ஒலி.

3. குறவன் கேழல் அட்ட பூசல்.

4. வேங்கை நறுமலர் கொய்யும்போது, வழக்கமாக மகளிர் எழுப்பும் குரல் ஆரவாரம்.

5. கேழ்அடு வயப்புலியின் பூசல்.

இவை அனைத்தும் சேர்ந்த ஒட்டுமொத்த ஒலிக்குச் சமமாக, மலையின்வீழ் பேரருவி ஒலி முழங்குவதால், மலையில் ஆரவார ஒலி, (இரட்ட) இரண்டு மடங்காகியது. கணக்கு சரிதானே? எனவே, பேரருவியின் அளவும், வேகமும், ஆற்றலும், சிறப்பும், பெறப்படும்:

**"... நறுங்காழ்.... .... பூசலொடு அனைத்தும்,**
**இலங்குவெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட**
**கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பு அணிந்து,**
**அருங்கடி மாமலை தழீஇ, ஒருசார்" (மது, பா. 286 - 301)**

**அருவியே மலைக்கு அழகு:**

**"... அருவி ஆன்ற அணிஇல் மாமலை...." (மது, 306)**

**உணர் கருத்து:**

அருவி இன்மை, அணியின்மைக்கு முக்கியக் காரணி ஆயிற்று! பெருமலைச் சாரல் அருவி, பாண்டியரின் மீன் கொடிக்குவமை:

மதுரையில், பதாகை (பாண்டிய மன்னரின் மீன்கொடி) காற்றில் அசைந்தாடியது. வேறுபல கொடிகளும் அங்கே அசைந்தாடின. எ-டு:

கல்வி, கொடை, தொடர் அறவுரை குறித்த கொடிகள்; பகைவரின் யானைப் படையையும் வென்ற, வெற்றிக்கொடி; அரண்களை, அரசன் ஏவலால் வென்ற பல கொடிகள்; கோயில்களில் விழா பொருட்டு ஏற்றிய அழகிய பல கொடிகள் எனக் குழுவாக விளங்கும் கொடிகள் காற்றில் அசைந்தாடுதல், நெடிதுயர்ந்த மலையின் முகட்டிலிருந்து அருவி தோன்றுகிற ‹ ண்கொள்ளாக் காட்சிபோலத் திகழ்கிறது:

**"...சா‚, அயர்ந்து எடுத்த உருவப் பல்கொடி,**
**வேறுபல் பெயர ஆர்எயில் கொளக்கொள,**
**நாள்தோறு எடுத்த நலம்பெறு புனைகொடி,**
**நீர்ஒலித் தன்ன நிலவுவேற் தானையொடு**
**புலவுப்படக்கொன்று மிடை தோல் ஓட்டி**
**புகழ்செய்து எடுத்த விறல்சால் நன்கொடி...**
**... பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇ,**
**பெருவரை மருங்கின் அருவியின் நுடங்க..." (மது., 366-374)**

**நெடுநல்வாடை:**

பாண்டியன் நெடுஞ்செழியனை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய இப்பாட்டில், அரசியின் அரண்மனையில், மழைநீர் வீழ்தலுக்கு, அருவி உவமையானது.

மலையில், கொம்போசை போன்ற மயிலின் அகவல் ஒலியும் அருவி வீழும் இனியஒலியும் ஆரவாரம் எழுப்பும். அதுபோன்ற ஆரவாரம், அரசியின் செல்வச்செழிப்பு மிக்க நிலா முற்றத்தில், குதிரையின் கனைகுரல், அங்கு துள்ளிவிளையாடும் மான், அன்னம் ஆகியவை எழுப்பும் ஒலிகள், மகரவாய் நீர்ப்பந்தல் வழியாக விழும் மழைநீர் அருவி ஓசை என அனைத்தும் சேர்ந்து எழுந்தது.

**"... பணைநிலை முனைஇய பல்உளைப் புரவி,**
**புல்உணாத் தெவிட்டும் புலம்டிவிடு குரலொடு,**
**நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்து,**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய,**
**கவிழ்ந்து வீழ் அருவிப் பாடு விறந்து அயல.**
**ஒலிநெடும் பிலிஒல்க, மெல்இயல்**

கலிமயில் அகவும் வயிர்மயிர் இன்இசை,
நளிமலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்" (நெடுநல், 93-100)

**குறிஞ்சிப் பாட்டு அருவியில் விளையாடல்:**

தலைவனுக்கு உரியமலை, நெடியமலை, அண்ணல்மலை எனச் சிறப்பிக்கத் தக்கது. இம்மலையின் உச்சியிலிருந்து இழியும் அருவி, தெளிந்த நீரை உடையது. வெண்மையான துகில் போன்ற அழகினை உடைய அந்த அருவியில், நெடுநேரம், விலகிச் செல்ல மனமின்றித் தொடர்ந்து விளையாடினர், தலைவியும் தோழியும்! பாட்டு:

".... அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு தெள்நீர்
அவிர்துகில் புதையும், அவ்வெள் அருவி
தவிர்வுஇல் வேட்கையேம் தண்டாது ஆடி,..."

(குறிஞ்சிப்பாட்டு 54-56)

அருவி மிக உயரம் என்னும் கருத்துக்கு அரண்செய்வது போல, முதல் அடியை அமைத்து, அடுத்த அடியில் கருத்தை நிலை நிறுத்தினார்:

**கம்பர் வியந்த கவின்மிகு அருவிகள்:**

**மேருவின், சம்பு, அருவி:**

தீம்கனி நாவல் ஓங்கும் கேன்உயர்குன்றின், செம்பொன் வாங்கின கொண்டு, பாரில் மண்டும் மால்யாறு மான, வேங்கையின் மலரும் கொன்றை விரிந்தன வீயும், ஈர்த்து தாங்கின கலுழி, சென்று தலைமயக்குறுவ தம்மில்! (குன்று - மேரு) கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம், கார்காலப் படலம், பா.எண்.30)

"நல்நெடுங் காந்தள் போதில், நறை விரிகடுக்கைமென்பூ,
துன்னிய கோபத்தோடும் தோன்றிய தோற்றம் - தும்பி,
இன்னிசை முரல்வ நோக்கி, இருநில மகள் கை'ஏந்தி';
பொன்னொடும் காசைநீட்டிக் கொடுப்பதே போன்றதன்றே!"

(கம்ப.கிட்கிந்தா.சார்., பா.31)

**பொன்மழை வழங்கின அருவி:**

களிக்கும் மஞ்ஞையை, கண்ணுளர் இனம்எனக் கண்ணுற்று, அளிக்கும் மன்னரின், பொன்மழை வழங்கின அருவி...

(கண்ணுளர் இனம் - கூத்தரின் இனம், விறலியர்) - மேலது, பா.37

**வரை அருவிகள்:**

"நிலமகட்கு அணிகன் என்ன நிரைகதிர் முத்தம் சிந்தி,
மலைமகள் கொழுநன் சென்னிவந்து வீழ்கங்கை மான,

அலகுஇல் பொன்அலம்பி ஓடி, சார்ந்துவீழ் அருவி மாலை,
உலகு அளந்தவன்தன் மார்பின் உத்தரீயத்தை ஒத்த."

- பாலகாண்டம், வரைக்காட்சி., பா.15

**சேக்கிழார் பாட்டில் அருவி:**

**பெரியபுராணம்; திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்:**

" 'அருவி' தந்தசெம் மணிகளும், புறவில் ஆய்மலரும்,
பருவி ஒடைகள் நிறைந்திழிபாலியின் கரையின்
மருவு ங்கைவாழ் சடையவர் மகிழ்ந்த மாற்பேறாம்
பொருவில் கோயிலும் சூழ்ந்ததப் பூம்பணை மருதம்.

(பா.எண்.1108)

***இளங்கோவடிகள் பாடிய வீங்குநீர் அருவி:***

கோவலனிடம் உரையாடும்போது, மாங்காட்டு மறையோன் கூறிய, வீங்குநீர் அருவி வேங்கடச் சிறப்பு:

"...வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்..."

- சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், காடுகாண்காதை

**பொன்நிற அருவி:**

"இற்பிறப்பு எண்ணி, இடைதிரியார் என்பதுஓர்
நல்புடை கொண்டமை அல்லது - பொன்கேழ்
'புனல்ஒழுக'ப் புள்இரியும் பூங்குன்ற நாட! -
மனம் அறியப்பட்டது ஒன்று அன்று!" (நாலடியார்; நட்புஆராய்தல்)

**கற்பால் இலங்கு அருவி:**

"நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவரால்;

இற்பாலர் அல்லார் இயல்புஇன்மை நோவது என்; -
கற்பால் இலங்கு 'அருவி'நாட! - மற்று யாரானும்
சொல்சோர்விலாதாரோ இல்." - (பழமொழி, பா.எண்)

**மால்நீல மால்வரை அருவி:**

"'மால் நீலம் மாண்ட துகில் உமிழ்வது ஒத்து, அருவி
மால்நீல மால்வரை நாட!' கேள்: மால்நீலம்
காயும் வேற்கண்ணாள், கனை இருளில் நீரவ,
ஆயுமோ? மன்றநீ, ஆய்!"

- திணைமாலை நூற்றைம்பது

**அருவிகுடைந்து ஆடல்:**

"காய்ந்தயல் அன்னை! இவளோ தவறு இலள்;
ஓங்கிய செந்நீர் இழிதரும் கான்யாற்றுள்,
'தேம்கலந்து வந்த அருவி குடைந்துஆட,
தாம் சிவப்பு உற்றன கண்." - ஐந்திணை எழுபது

**இசைக்கருவிகளை வென்ற இன்னிசை அருவி:**

"யாழும் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி விறல்மலை நல்நாட!
மாழை மான்நோக்கியும் ஆற்றாள்; இரவரின்
ஊர்அறி கௌவை தரும்." - திணைமொழி ஐம்பது

**முரசு அருவி ஆர்க்கும்:**

இரசம் கொண்டு இன்தேன் இரைக்கும் குரலைப்
பிரசை இரும்பிடி பேணி வருஉம்
முரசு அருவி ஆர்க்கும் மலை நாடற்கு, என்தோள்
நிரையம் எனக்கிடந்த வாறு - புல்லங்காடனார்

சி.பா.

# பட்டினப்பாலை பொ.வே.சோமசுந்தரனாரின் உரை நெறி

முனைவர் செ.ரவிசங்கர்

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியலைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அதிலும் தமிழர்கள் செல்வவளம் நிறைந்த வாழ்வைக் கொண்டிருந்தனர் என்னும் தன்மையை விளக்கும் நூலாக பட்டினப் பாலை இருந் ு வருகிறது. இது பத்துப்பாட்டில் ஒரு நூலாக அமைந்துள்ளது இந்நூலை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணார் இந்நூலில் உரையாசிரியர் பொ.வே.சோமசுந்தரனார் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டி உரை வரைந்துள்ளார் அவரது உரையின் போக்கினை உரைநெறி என்கிற தன்மையில் இக்கட்டுரையில் காணலாம்.

**சோழர் பெருமை**

மூவேந்தர்களில் சோழ மன்னர்களின் பெருமையை . பட்டினப் பாலை மிக நயமாக எடுத்துரைக்கிறது.

“வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து வயங்கி வெண்மீன்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும்தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி” 1-6

என்று பட்டினப்பாலையில் உள்ள வரிகளுக்கு உரை தரும்போது ஆசிரியர் வெள்ளிதிசை திரிந்து தேற்கேகின் உலகில் மழை பொய்த்து வற்கடம் உண்டாகும் என்னும் கொள்கையுடையர் நம் பண்டைத் தமிழ் மக்கள் வெள்ளிக்கோள் தெற்கே போய்விட்டால் மன்னன் தவறு செய்து விட்டான் அவன் செங்கோண்மை மறந்து கொடுங்கோண்மை புரிந்து விட்டான் என்பதாக ஒரு கருத்து உண்டு எனவே உரையாசிரியர் சோமசுந்தரனார் சோமசுந்தரனார் சோழர்களைப்பற்றி கருத்துரைக்கும் போது “இனி உலகில் அரசர் பலராக வெள்ளிக்கோள் ஒன்றே யாதலால் அவ்வரசர்களும் பலர் செங்கோன்மை பிறழ்ந்த வழி வெள்ளிக்கோள் மிகைநாடி மிக்க கொண்டு தெற்கேகும் என்றும் சோழமன்னர் எக்காலத்தும் செங்கோன்மை பிறழ்தல் இலராகலின் அவர் நாட்டின் யாறு பெருகல் வேண்டி முகில் குடகு மலையிற்பொய்யாது மழை பெய்யும் என்றும் அதனால் என்றும் எனவே கோள்நிலை திரியினும் கோனிலை

திரியாது நின்று மழை தரும் சிறப்பினர் சோழ மன்னர் என்று உரை வகுத்துள்ளார். இறுதியாக சோழனை பெருமைப்படுத்தும் விதமாக மழைக்குக் கோள்களினும் அரசரே சிறந்த காரணராதல் அறிக என்கிறார். இது சோழனை பெருமை செய்யும் செயல்.

**பொ.வே.சோ.வின் உரை நெறி**

உரையாசிரியர் பட்டினப்பாலைக்கு உரைநெறி தரும்போது மிகக்கவனாக பல சான்றுகளைக் கொடுத்தும் மேற்கோள்களைத் தந்தும் தேவையான அளவு தொடர்களையும் சொற்களையும் விளக்கி உரை தந்துள்ளார். மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துரை, அகலவுரை, பொருள் விளக்கம் போன்றவற்றைத் தந்துள்ளார். அந்த வகையில் இவரது உரையில் தமிழர்களின் பல்வேறான பழக்க வழக்கங்கள் வெளிப்படுகின்றன.

1.கருத்துரை

2.அகலவுரை

3.தொடர் விளக்கம்

4.சொற் விளக்கம்

5.இலக்கணக்குறிப்பு

6.அருஞ்சொற்பொருள் தருதல்

7.நச்சினார்க்கினியர் உரையை ஏற்றல் மறுத்தல்

8.கொண்டி மகளிர் செய்தி

9.கொடி நிலை விளக்கம்

10.மேற்கோள் சான்று

போன்றவைகளைக் கொண்டு மிகவும் நேர்த்தியாக உரை தந்துள்ளார். ஒரு கருத்தை மிகுந்த வலிமையோடு தருவதற்கு முந்தைய உரையாசிரியர்களின் கருத்தையும் வரலாற்றாசிரியர்களின் கருத்தையும் உலகியல் கருத்தையும் கொண்டு எழுதியுள்ள பாங்கு போற்றுதலுக்குரியது.

**கருத்துரை**

"முற்றிழை மகளிர் முகில்முலை திளைப்பவும்
செஞ்சாத்து சிதைந்து மார்பின் ஒண்பூண்
அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் தோளே" 296-301

என்னும் வரிகளுக்கு பொருள் வழங்கி விட்டு அதற்குரிய கருத்துரையை உரையாசிரியர் சுருக்கி தன் பகைவர்மேல் ஒச்சிய வேலினும் நாம் செல்லக் கருதிய காடுவெப்பமுடையன நாம் இப்பொழுது எய்திருக்கின்ற இவள் தோள்களோ அவன் செங்கோலினும் குளிர்ந்தனவாம் ஆகலான் என்பதாம் என்று கருத்துரைத்துள்ளார்.

இதுபோல எல்லா வரிகளுக்கும் ஒரு கருத்தினை வழங்கியுள்ளார். இது பாடலின் மையத்தைப்புரிந்து கொள்ள உதவுகின்றது. ஆனால் அந்த வரிகளில் உ ்ள நயத்தையும் உண்மையையும் உணர்ந்து கொள்ள ஆசிரியர் முய ற்சி மேற்கொண்டு அதனை அகலவுரையில் தருகிறார்.

**அகலவுரை**

தடமென்றோள் தரும் இன்பம் இம்மையிற்பெறும் இன்பம் அனைத்தினும் ஒப்பற்றுயர்ந்து பேரின்பமாகலின் கோல்தரும் இன்பம் புறவின்பங்களும் சிறந்ததாயினும் இவ்வின்பத்திற்கு ஒவ்வாமையின் கோலினும் தண்ணிய என்றான் என்க எனக் கூறிவிட்டு சான்றாக அகலமான உரை தருவதன் பொருட்டு குறளைச் சான்று காட்டுகிறார்.

**"உறுதோ றுயிர்தளிப்பத் தீண்டலாற் பேதைக்**
**கமிழ்தின் இயன்றன தோள்" (கு116)**

**"தாம்வீழ்வார் மென்றோட் குயிலி ணினிதுகொல்**
**தாமரைக் கண்ணர் லுலகு" (கு1103)**

என்று மகளிர் தோள் தரும் இன்பம் சான்றோர்கள் போற்றப்படுதல் காண்க என்கின்றார். இது போல தான் உரையில் கூற வந்த கருத்தினைச் சான்று காட்டி அகலவுரையாக ஆக்கிக் கொடுத்துள்ளார் இது ஆசிரியர் பொ.வே.சோமசுந்தரனாரின் பல்துறை அறிவுப் புலமையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இது போன்று அரிய உரையை இது வரையில் யாரும் தர முன் வரவில்லை. பாடலுக்கு உரை என்பதைவிட இது சிறந்து விளங்குகிறது.

**தொடர் விளக்கம்**

உரையாசிரியர்கள் பாடலில் உள்ள தொடர்களை விளக்கிச் செல்கின்ற வழக்கம் உள்ளது.

**"விளைவறா வியன் கழனிக்**
**கார்க்கரும்பின் கமழாலைத்" (8-9)**

என்னும் அடிகளுள் விளைவறா வியல் கழனி என்பதற்கு என்றார் வியல் அகலம் "வியலென் கிழவியகலப் பொருட்டே" என்பர் தொல்காப்பியர் செல்வர்களின் வயல்கள் என்பது தோன்ற வியன் கழனி" என்றார் வியன் கழனிகளையுடையனவும் ஆகிய குறும்பல்லூர் எனக் கூட்டுக. 'என்று

தொடருக்கான முழு விளக்கத்தையும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் உரை தந்துள்ளார்.

**"பூதங்காக்கும் புகலருங் கடிநகர்" (58)**

என்னும் தொடருக்கு சில எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து "பூம்புகார்" நகரை படைகளும் காக்கும் ஆனால் பல தவப்பள்ளிகள் இருக்கும் நகரம் ஆதலால் பூதங்களாலும் இப்புகார் நகரம் காக்கப்படும் சிறப்பெருத் தோதுவார் பூதங்காக்கும் புகலருங் கடிநகர் என்றார். மேலும் இதனை தக்க சான்று கொண்டு நிறுவுகிறார்.

**"தேவர் கோமான் ஏவலிற் போந்த**
**காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை"** ***சிலம்பு 5:66:7***
**"கோ நகர் காத்த மாபெரும் பூதம்**
**இருந்து பலி உண்ணும் இடனும்"** **சிலம்பு 6:8:11**

இனி அப் பூதந்தானும்

**"தவமறைந்தொழுகும் தன்மையிலாளர்**
**அவமறைந்தொழுகும் அலவற்பெண்டிர்**
**அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்**
**பொய்க் கரியாளர் புறங்கூற்றாளர் என்**
**கைக்கொள் பாசத்துக் கைப்படுவோரெனக்**
**காத நான்கும் கடுங்குச வெருப்பி"**

படைத்துண்ணும் எனப்படுதலான் பகைவரேயன்றித் தீவினையாளரும் புகுத்தற்கரிய அச்சந்தரும் நக்ர் என்பார் புகலருங் கடிநகர் என்றார். இவ்வாறாக ஒரு தொடருக்கு நெடிய விளக்கத்தையும்தான் கூறிய உரையை அழுத்தமாக உண்மையாக்க முயன்றுள்ளதையும் பொ.வே.சோ. உரையில் காண முடிகின்றது.

**"இருங்கிளை யினனொக்கற்**
**கருந்தொழிற் கலிமாக்கள்" (61-62)**

என்னும் தொடருக்கு ஒரு குடியினின்றும் கிளைத்தலால் தாயத்தார் கிளை எனப்பட்டார் இருமை ஈண்டுப் பெருமை குறியாது அண்மை குறித்து நின்றது என்க இருங்கிளையும் இனன் ஒக்கலும் என்க இனன் ஒக்கல் என்றது ஓரினத்தினராய் மாமன் மைத்துனன் என்னும் முறைமையுடைய சுற்றத்தார். எனவே தாயத்தாரும் ஓரினச் சுற்றத்தாரும் ஆகிய மாக்கள் என்ற படியாம் என தொடரை மிகவும் தெளிவாக தெளிவு படுத்தியுள்ளார். இவ்வாறாக தொடருக்கான விளக்கத்தை பட்டினப்பாலை முழுவதும் மிகச்சிறப்பாக உரையெழுதித் தந்துள்ளார்.

**சொற் பொருள் விளக்கம்**

பொ.வே.சோ. தம் பட்டினப்பாலை உரையில் சொற்களுக்கு அகராதிப் பொருள் மட்டுமின்றி சிறந்த விளக்கங்களையும் கொடுத்துள்ளார் சில சான்றுகள் வருமாறு

**"அறநிலை இய அகனட்டிற்**
**சோறுவாக்கிய கொழுங்கஞ்சி" (43-44)**

என்னும் அடிகளில் உள்ள கொழுங்கஞ்சி என்னும் சொல்லுக்கு கொழுப்பை உண்டாக்கும் கஞ்சி அது தானும் தன்னளவில் உயிரோம்பும் சிறப்புடையா தென்பார் கொழுங்கஞ்சி என்றார் இதனால் சோற்றில் உயிரோம்புதற் றன்மெ கூறாமலே அமைதறிக என்கிறார்.

**முரண்களரி**

மறவர்கள் தம்முள் வலி மிகுதி காணும் பொருட்டுப் போரிடும் விறற்களம் இது விளையாட்டுப் போராகளின் வீழ்ந்தவர் உடல் புண்படாமைப் பொருட்டு மணற்பரப்பிலே அமைக்கப்பட்டன என்பர்.

**பறழ் - குட்டி**

**" நாயே பன்றி புலி முயல் நான்கும்**
**ஆயுங் காலைக் குருளை என்ப"**

**"குட்டியும் பறழும் கூற்றவண் வரையா" தொல்.மரபு 8-10**

*என்பதோத்தாகலான் பன்றிக் குட்டியைப் பறழ் என்றாற் பறழ்ப்பன்றி-* குட்டிப் பன்றி என்பதை தக்க சான்று கொண்டு பொருள் விளக்கம் தந்துள்ளார்.

**"சினைச் சுறவின் கோநட்டு**
**மனைச் சோத்திய வல்லணங்கினால்" 86-87**

இதில் இடம்பெறும் சினைச் சுறா என்பதற்குப் பொருள் விளக்கம் தரும் பொ.வே.சோ. அவர்கள் கருக்கொண்ட சுறாமீன் இம்மீன் முகத்திலே நீண்ட கொம்புடையதாம் நெய்தனில மாக்கள் வலை வளம் பெருகும் பொருட்டு அந்நில தெய்வமாகிய வருணனைச் சுறவுக்கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்து வழிபாடியற்றல் மரபு என்கின்றார் இதுபோல பட்டினப்பாலையில் பொரும்பாலான சொற்களுக்கு தக்க சான்று காட்டி பொருள் விளக்கம் தந்துள்ளார்.

**இலக்கணக் குறிப்பு**

பட்டினப்பாலை உரையில் இலக்கணக் குறிப்பு வழங்கி புரியாத சொற்களையும் தொடர்களையும் எளிதாகவும் உரை கண்டுள்ளார் ஆசிரியர் பொ.வே.சோமசுந்தரனார். சான்றுகள்,

சாய்த்த - காய்ச்ச என மருவி ஈறுகெட்டதென்க (31)

கோணாடு - சோழநாடு என்பதன் மரூஉ - 35

வான் - முகிலுக்கு ஆகுபெயர் - 58

பொதிமூடை - வினைத்தொகை -59

வியல் - உரிச்சொல் - 62

இவ்வாறாக இலக்கணக் குறிப்புகளைக் கொண்டு உரையை வரைந்துள்ளார் மிகவும் விரிவான விளக்கத்திற்கு இது பயன்படுகிறது.

**அருஞ்சொற் பொருள்**

உரையில் அரிய சொற்களுக்கு எல்லாம் தற்காலத்தில் வழக்கில் இருக்கின்ற பொருளை அருஞ்சொற்பொருளாக உரையாசிரியர்கள் கொடுப்பார்கள். அது போலவே இந்த உரையாசிரியர் பொ.வே.சோம சுந்தரனாரும் அரிய சொற்களுக்கான பொருளைக் கொடுத்துள்ளார்.

பஃறி - படகு - 37

கலி - செருக்கு - 37

வேட்டம் - மீன் வேட்டை - 50

துகிர் - பவளம் - 61

ஆவணம் - அங்காடித்தெரு - 62

உவவு - நிறைமதி நாள் - 50 (பௌணர்மி)

துப்பு - வலி - 97

இது போன்று சமகாலத்தில் பயன்பாட்டில் உள்ள சொற்களை அருஞ்சொற் பொருளாகக் கொடுத்து உரையை புரிய வைத்துள்ளார். இது இன்றைய காலத்தில் வேறு பொருளைத் தருவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**நச்சினார்க்கினியர் உரையை ஏற்றல் மறுத்தல்**

பட்டினப்பாலைக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையை பொ.வே.சோ. அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய இடத்தில் ஏற்றுக் கொண்டும் பொருந்தாத இடத்தினில் அவற்றை மறுத்து புதிய உரையைக் கொடுத்து எழுதியுள்ள பாங்கு போற்றுதலுக்குரியதாக அமைந்துள்ளது.

**"புலவு மணற் பூங்கானல்**
**முமலை தழுவிய குழவி போலவும்**
**தேறுநீர்ப் புணரியோடி யாறுதலை மணக்கும்**
**மலியோதத் தொலிகூடல்**
**தீது நீங்கக் கடலாடியும்**

மாசுபோகப் புனல்படிந்தும்
அலவனாட்டியும் உரவுத்திரை உழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல் விளையாடிப்
பெறற் கருஞ்தொல் சீர்த் துறத்த மேயக்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப் புணர்ந்த மடமங்கெயர்" (94-105)

இப்பாடலுக்கு உரை தந்த பொ.வே.சோ அனைந்த முகிற்றிரல் கடலாடும் மக்கட் குழுவிற்கும் தாய் முலை தழுவிய சேய் காவிரியாற்றில் ஆர்வத்தோடு படியும் மக்கட் குழுவிற்கும் நிறைநிறையாக உவாமயாம காவேரியைத் தாயாகவும் மக்களை சேயாகவும் கொள்ளுதலை காண்க என்றார். பின்பு, ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவ்வுவமையைக் கடலோடு காவிரி கலத்தற்கே கொண்டு கொண்மூ என்றதற்கு செக்கர் மேகம் என வலிந்து பொருள் கூறி "கரிய உயர்ந்த திரை மீதே சிவந்த யாற்றுநீர் பரந்தற் குவமை என்றும் தாய் முலை தழுவிய சேய் என்றற்கு இது ஒன்று படுதற்கு உவமை என்று கூறியுள்ளார் என்று கூறி நச்சு வலிந்து உரை தந்துள்ளார் என்பதாகக் கூறியுள்ளார் இது நச்சு உரையை மறுப்பதாக ஆயிற்று.

" நீர் நாப் பண்ணு நிலத்தின் மேலும்
ஏமாப்பு இனிது துஞ்சி
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர் முன்றில் மீன் பிறழவும்
விலைஞர் குரம்பை மாவீண்டவும்
கொலைகடிந்தும் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆவுதி அருந்தியும்
நல்லாணொடு பகடோம்பியும்
நான்மறையோர் புதழ்பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நரையுழவர்" 194-205

இவ்வரிகள் வேளாண்மை குடி சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றியது இதில் வரும் பண்ணியம்பண்டம் ஈண்டுப் பண்ணியாரம் என்க விருந்தினருக்கு சுவையாக கொடுத்த உணவு ஏனைய குடிகட்கும் தண்ணிழலாம் தன்மையுடையதாகலின் வேளாண் வாழ்க்கையைத்

தண்ணிழல் வாழ்க்கை என்றார் பட்டினப்பாலையின் ஆசிரியர் எனக்கூறி குறள் 1039 ஐச் சான்றாகக் காட்டுகிறார் பொ.வே.சோமசுந்தரர். ஆனால் நச்சு இதனை வணிகர்களுக்கு ஏற்றிக் கூறுவதாகக் கூறுகிறார் பொ.வே.சோ. அதாவது "வைசிகன் பெறுமே வணிக வாழ்க்கை" மெய்தெரி வகையின் எண் வகை வணவின் செய்தியும் வரையாராப்வான் என்பனவற்றால் வணிகர்க்கு உழவுத் தொழிலுரித்தாகலாற் பகடோம்பியும் என்றார். "யாகத்திற்குப் பசுவை ஓம்பியும் என்றார் என்பது அவர் கூறிய விளக்கம் "பண்ணிய மட்டி என்பதற்குச் சோற்றை ஆக்கியிட்டும் என்பாரும் உளர். பசும்பதம் அரிசியும் கறியும் என்பாரு உளர் என்பனவும் நச்சு குறிப்புகளேம் எனக் கூறி இதனை மறுத்து விடுகிறார் பொ.வே.சோ. அவர்கள்.

**முடிவுரை**

மேற்கண்டவாறு பட்டினப்பாலைக்கு பொ.வே.சோமசுந்தரம் அவர்கள் சிறப்பான உரையைத் தந்துள்ளார். இவை தவிர அவர் உரையில் உழவில் சிறப்பு கொண்டி மகளிர் நிலை மற்றும் பாடவேறுபாடு தமிழ்நாட்டில் பட்டினப்பாலை காலத்தில் இருந்த கொடி முதலியவற்றை மிகவும் நயமாகவும்; தக்க சான்றோடும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் பல வகையான தமிழ் நூல்களையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அந்த வகையில் அவரது உரைநெறி பாராட்டுதற்கும் போற்றுதலுக்கும் உரியதாக அமைந்துள்ளது.

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 1,000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5,000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம்

முனைவர் உ.கருப்பத்தேவன்

**முன்னுரை:**

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் மனவருத்தம் தருகின்ற துயரங்கள் 'பையுள்' என்ற நோயாகவும், உடல் வருத்தம் தருகின்ற துயரங்கள் சிறுமையாகிய 'பிணி' என்றும் பேற்பபட்டிருக்கின்றது. ஒரு மனிதனுக்கு உடலாலும் உள்ளத்தாலும் துயரங்கள் தருவது நோயாகும். 'நோய்' என்பது உடல் நலக்கேடு அல்லது உடல்நலக்கோளாறு ஆகும். அது முதிர்ச்சியடைந்தால் உடம்பினைக் கொன்றுவிடும். இதனையே சான்றோர் 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' என்றனர். 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம்' என்னும் பொருளில் அமைந்துள்ள இவ் ஆய்வுக்கட்டுரை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சுட்டும் நோய்கள், மருந்துகள், மருத்துவ முறை ஆகியவற்றை விரிவாக ஆராய்வதாக அமைந்துள்ளது.

**'மருந்து' என்பதற்கு விளக்கங்களும் வரையறைகளும்:**

'மருந்து' என்பதற்கு சித்தர்களுள் முதன்மையராகக் கொள்ளப்பெறும் திருமூலர் தனது திருமந்திரத்தில் இக்கால மக்களும் மருத்துவர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நுட்ப மான வரையறையையும் விளக்கத்தையும் தந்துள்ளார். அவர் நோயை உடல்நோய், உளநோய் என இருவகையாகக் கூறுபடுத்தி யுள்ளார். மருந்து என்பதற்கு உடல்நோயினைத் தவிர்ப்பது, உள நோயினைத் தவிர்ப்பது, இனிமேல் நோய் வராமல் தடுப்பது, மரணத்தைத் தடுப்பது என நான்கு வகையான வரையறைகளை அவர் தந்திருக்கின்றார். இக்கருத்தமைந்த பாடல் வருமாறு:

**"மறுப்பது உடல்நோய் மருந்து எனலாகும்**
**மறுப்பது உளநோய் மருந்து எனலாகும்**
**மறுப்பது இனிநோய் வராதிருப்ப**
**மறுப்பது சாவை மருந்து எனலாகும்"**

**(திருமூலர், திருமந்திரம், 8000)**

திருமூலர் கருத்துப்படி மரணத்தைத் தடத்து மரணமில்லாப் பெருவாழ்வை மக்களுக்கு அளிப்பதே மருந்தாகும்.

"அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து" (நற். 140:)

என்னும் நற்றிணைப் பாடலடி நோயாளியின் துன்பத்தையும் துயரத்தையும் துடைப்பதே 'மருந்து' என விளக்கம் தருகின்றது. குறிஞ்சிக் கலிப் பாடலொன்றில் நோயாளியின் அருந்துயரையும் கடும் வேதனையையும் தீர்ப்பதே மருந்து எனச் சொல்லப்பட்டிருக் கின்றது.

"அருந்துயர் ஆரமர் தீர்க்கும் மருந்து" (குறிஞ்சிக்கலி. 8: 20-21)

பாலைக்கலிப் பாடலொன்றில் 'உயிர் காப்பது மருந்து' என்று, உயிரைப் பாதுகாக்கும் பொருளாக மருந்து வரையறுக்கப் பட்டிருக்கின்றது.

"இன்னுயிர் செய்யும் மருந்து" (பாலைக்கலி. 31: 14-15)

எனினும் மருந்து என்பதற்கு திருவள்ளுவர் வழங்கியுள்ள வரையறையே பொருளில் முழுமையுடையதாக விளங்குகின்றது. மருந்தின் முக்கியத் துவத்தையும் தேவையையும் கருத்தில் கொண்டே அவர் திருக்குறளில் 'மருந்து' என்ற தனி அதிகாரத்தையே அமைத்திருக்கின்றார். மருந்து என்பது நோயாளி (நோயுள்ளவன்), மருத்துவன் (அந்நோயைத் தீர்ப்பவன்), மருந்து (மருந்துப்பொருள்), தாதி (உழைச் செல்வான் -Nurse) என நான்கு கூறுகளைக் கொண்டது என்கின்றார் திருவள்ளுவர். இந்நான்கு கூறுகளும் ஒன்றோடொன்று இயைந்த செயற்பட்டால் மட்டுமே நோய் குணமடையும் என்பது அவரது கருத்தாகும்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து" (குறள். 950)

**உழைச்செல்வான் (Nurse)**

தமிழில் தோன்றிய சமணக்காப்பியமான கொங்குவேளிரின் பெருங்கதையில் 'உழைச்சுற்றாளர்' என்னும் சொல்லாட்சி காணப் படுகின்றது. (பெருங்கதை, உஞ்ஞைக் காண்டம், 33, 14) உ.வே. சாமி நாதையர் 'உழைச்சுற்றாளர்' என்னும் இச்சொல்லுக்கு அருகிலமர்ந்து பணிபுரிபவர் என்று பொருள் கூறியுள்ளார். தமிழ்ச் சொல்லகராதியிலும் (Tamil Lexicon, Supplement, Part-I, p. 42). இதேபொருளில் நோயாளியின் அருகிலமர்ந்து மருந்து முதலியன கொடுப்பவர் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. எனவே 'உழைச்செல்வன்' என்னும் சொல்லாட்சி, நோயாளிகளுக்குத் தேவையான பணிவிடைகளை முடித்துச் செல்பவன் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பது அறியத்தக்கதாகும்.

**வள்ளுவர் வழங்கிய மருந்தும் மருத்துவமும்:**

நாம் உண்ணும் உணவில் உடல்தேவைக்கேற்ப ஊட்டச் சத்துக்கள் அனைத்தும் சமமாக இருக்க வேண்டும். அறிவியலார்

இதனைச் 'சம உணர்வு' என்கின்றனர். உண்ணும் உணவில் விட்டமின்கள், தாது உப்புக்கள், கனிமங்கள், மற்ற சத்துக்களும் உரிய அளவில் கலந்திருக்க வேண்டும். இவற்றில் ஏதேனும் ஒன்றின் தேவையும் அளவும் மிகுவதாலும் குறைவதாலும் உடலில் நோய்கள் ஏற்படுகின்றன.

"நமது உடலமைப்பில் ஆறுநிலைகள் உள்ளன. அவை மந்திர நிலைகளாகும். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாகும். இந்த ஆறுநிலை களின் தொழில் மிகினும், கு றையினும் நோய் ஏற்படும் என்று சித்த மருத்துவநூல் கூறுகின்றது. மனிதன் உயிர்வாழ உடலில் இயங்கும் நாளமில்லாச் சரப்பிகள் இன்றியமையாதவை. உடலின் பல செயல்களும் சீராய் நடைபெற இச்சுரப்பிகளின் இயக்கம் ஒழுங்காக இயங்க வேண்டும். நீரிழிவு நோய், நாளமில்லாச் சுரப்பிகளின் சீர்கேடான இயக்கத்தால் ஏற்படுவது ஆகும்" (அ.காசி, வள்ளுவர் வழங்கும் மருந்து, பக். 3334)

மக்கள் நோயுறுவதற்குரிய காரணத்தைக் குறிப்பிட வந்த வள்ளுவர்,

> **"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
> **வளிமுதலா எண்ணிய மூன்று" (குறள். 941)**

என்று 'மருந்து' என்னும் அதிகாரத்தின் முதற் குறட்பாவில் குறிப்பிடுகின்றார்.

**வாதம், பித்தம், கபம்:**

வாதம், பித்தம், கபம் ஆகிய முக்குணங்களும் உடம்புக்கு ஏற்ற அளவு இல்லாமல் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என மருத்துவ நூலோர் கூறியுள்ளதையே 'வளிமுதலா எண்ணிய மூன்று' என வள்ளுவர் கூறியிருப்பதாகக் கொள்ளலாம். தமிழ் மருத்துவர்கள் இம்முக்குணங்களின் சுவை வீரியங்களை வாதம், துவர்ப்பு, புளிப்பு; பித்தம் உப்பு, கசப்பு; கபம் இனிப்பு, கார்ப்பு எனச் சுட்டியுள்ளனர். இச்சுவை வீரியங்கள் குறைந்தாலும் மிகுந்தாலும் நோய் உண்டாகும் என்னும் தமிழ் மருத்துவ முறையின் நுட்பத்தை வள்ளுவர் இங்கு நுட்பமாக வெளிப்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தவிர நமது உடலில் பதினான்கு வீரியங்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வீரியங்கள் மிகினும் குறையினும் நோய் ஏற்படும் என்னும் கருத்தும் இக்குறட்பாவிற்குப் பொருத்தமாக அமைகின்றது.

**மருந்தென வேண்டாம் யாக்கைக்கு:**

முன்பு உண்ட உணவு செரிமானம் ஆனதைத் தெளிவாக அறிந்த பின்னர் தக்க அளவு மறுபடியும் உண்போமாயின் உடம்பிற்கு மருந்து ஒன்றும் தேவையில்லை என்கின்றார் வள்ளுவர்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (குறள். 942)

உண்ட உணவு செரித்தலும் குருதியில் சேர்தலும், பின்னர் தசைகளில் எரிக்கப்பட்டுச் சக்தியாக மாற்றப்படுதலையும் தெளி வாகக் குறிக்கவே வள்ளுவர் 'அருந்தியது அற்றது போற்றி' என்கின்றார். நாம் உண்ட உணவு செரிமானம் ஆவதற்கு முன்னர் பிற சுவையான உணவை உண்ணக்கூடாது. என்பதை வலியுறுத் தவே அவர் 'போற்றி உணின்' என்கின்றார். உண்ட உணவு செரித்து குருதியில் சேர்ந்து உடலுக்குச் சக்தியாகப் பயன்பட்டு கழிவுகள் உடலிலிருந்து நீங்குவதற்கு 12 மணிநேரம் தேவையென முன்னோர்கள் கூறியுள்ளனர். உண்ட உணவு சக்தியாக மாற்றப்பட்ட பின்னர் எஞ்சியிருப்பது மலமும் சிறுநீருமாக வெளியேற்றப் படுகின்றது.

ஆதலால் காலையில் மலம் கழித்த பின்னரும், இரவு மலம் கழித்த பின்னரும் உணவு உட்கொள்ளும் பழக்கம் நோயற்ற வாழ்வின் அடிப்படையாகும். ஒரு நாளில் இருவேளை உண்ணுதல் சிறந்த வழியாகும். அதுவே நலமுடன் வாழ்பவனின் வாழ்க்கை முறையாகும். இதனாலேயே 'ஒரு பொழுது உண்பான் யோகி; இருபொழுது உண்பான் போகி; முப்பொழுது உண்பான் ரோகி' என்னும் முதுமொழியும் வழங்கப்படுகின்றது.

'உணவே மருந்து' என வலியுறுத்தும் வள்ளுவர், அறியாமை யால், கண்டதையும் உண்டு மக்கள் நோய்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என எச்சரித்தும் அறிவுறுத்துகின்றார்.

**பசித்துப்புசி - அளவறிந்து உண் - நீண்டநாள் வாழும் வழி:**

முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து, தகுந்த உணவு முறைகளைக் கடைப்பிடித்து உடலுக்கு மாறுபாடு இல்லாத உணவுகளை ஏற்று, நன்றாகப் பசியுணர்வு தோன்றியபின் உண்ண வேண்டும் என்பதையே வள்ளுவர் 'பசித்துப்புசி' என்கின்றார்.

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துர்க்க துவரப்பசித்து" (குறள். 944)

'பசி உணர்வை அறிந்து உணவை ஏற்க வேண்டும்' என்பதை வள்ளுவர் வலியுறுத்தும் சிறந்த மருத்துவ முறையாகும். குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்து நிற்பதைப்போல, மிக அதிகமாக உண்பவனிடம் நோய் நிற்கும். ஆதலால் அளவறிந்து உண்ணவேண்டும் என்பதைச் சிறந்த மருத்துவ முறையாக வள்ளுவர்,

**"இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**

**கழிபேர் இறையான்கண் நோய்" (குறள். 946)**

என்னும் குறட்பாவில் குறிப்பிடுகின்றார். உயிர் இன்பத்தின் அடிப்படை உணவே; ஆயினும் உண்பதற்காகவே வாழ்வதும் வளர்வதும் இழிவாகும். இக்குறட்பாவில் 'இன்பம்' என்பதற்குப் பரிமேலழகர் மனம், *மொழி, மெய் மூலம் அறம் பொருள் இன்பம் வீடடைதல்* என்று உரையெழுதியிருப்பது சிந்திக்கத்தக்கதாகும்,

முன் ॥ உண்ட உணவு செரித்துவிட்டால், பின் தேவையான அவாவறிந்த உண்ண வேண்டும், அதுவே உடம்பை நெடுங்காலம் வாழவைக்கும் வழியாகும்.

**"அற்றால் அளவறிந்து உண்க அஃது உடம்பு**

***பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு"* (குறள். *943*)**

நாம் உண்ணும் ஒருநாள் உணவின் அளவைக் குறிப்பிட வந்த வள்ளுவர் 'உண்பது நாழி' என்றார். அதைப்போல வள்ளுவர் நோயற்று நீண்ட நாள் வாழ்வதற்கு 'அளவறிந்து உண்க' என வலியுறுத்தியுள்ளார். உடம்பைப் பெற்றதன் பயன் உயிரை இன்புறச் செய்தலே; உயிர் இன்புற உடல் நோயின்றி இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமையும் என்பது இக்குறட்பா தரும் சிந்தனையாகும்.

**ஊறுபாடில்லை உயிர்க்கு:**

உடலில் உயிர்வாழ, உடலின் தன்மைக்கேற்ப, மாறுபாடில் லாத உணவை உண்டு மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பதை வள்ளுவர்,

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்**

**ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (குறள். 945)**

என்று அறிவுறுத்துகின்றார். சுவரை வைத்தே சித்திரம் வரைய வேண்டும். அதைப்போலவே உடலின் தன்மையைக் கொண்டே உணவுமுறைகளை அளவோடு அமைத்துக் கொள்ள வேண்டும். 'மறுத்து உண்ணின்' என்பதற்கு உண்ணாநோன்பிருந்து பின்னர் உண்பது எனப்பொருள் கொள்ளலாம். உணவு விலக்கல், உண்டி மறுத்தல், உண்ணா நோன்பிருந்தல் என்ற மூன்றும் ஒரே பொருளுடையதாகும்.

'வேதனையடைந்த ஆன்மாவின் வழிபாடே உண்ணா நோன்பு' என்று காந்தியடிகள் கூறியுள்ளார். இராமலிங்க அடிகளார் வலியுறுத்தும் மூன்று தராக மந்திரங்களில் ஒன்று 'பசித்திரு' என்பதாகும். அவர் உண்ணா நோன்பினையே இவ்வாறு குறித்துள்ளார். வள்ளுவர் இதைத்தான் 'மறுத்து உண்' என்கின்றார். 'உடம்பார் அழியின் உயிரார்

அழிவர்' என்ற திருமந்திரக் கருத்தைத் தான் வள்ளுவர் இக்குறட்பாவில் வலியுறுத்தியுள்ளார். உயிர்வாழ உடல்தேவை, உடலில்லாமல் உயிரில்லை. உடல் நோயற்ற நிலையில்தான் உயிர் இன்புறும். இதனைத் தெளிவுபடுத்தவே வள்ளுவர் 'ஊறுபாடில்லை உயிர்க்கு' என்கின்றார்.

**மருத்துவன் கடமை:**

மருத்துவன் கடமையைக் குறிப்பிட வந்த திருவள்ளுவர்,

**"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் சொல்"** **(குறள். 948)**

என மருத்துவனின் மூன்று பணிகளைக் குறிப்பிட்டு, அதற்கேற்றாற் போல் மருத்துவன் நோயாளிக்குச் சிகிச்சையளிக்க வேண்டும் என்கின்றார். 1) நோயாளியிடம் கண்ட நோயை அதன் குறிகளால் இன்னது என்று துணிந்து அறிதல் 2) அந்நோய் வருவதற்கான காரணத்தை ஆராய்ந்து தெளிதல் 3) அந்நோயைத் தீர்க்கும் வழியை அறிதல் (நோய், நாடி, நோய்முதல் நாடி, வாய்நாடி) என்ற மூன்று பரிசோதனைகளால் சோதித்து அதன் பின்னரே மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுக்க வேண்டும். ஊசி போட வேண்டும் என வள்ளுவர் மருத்துவன் மேற்கொள்ள வேண்டிய மருத்துவப் பரிசோதனை முறைகளை இக்குறட்பாவில் வலியுறுத்துவது குறிப் பிடத்தக்கது. நோயையும், நோயின் காரணத்தையும், அந்நோயைத் தீர்க்கும் வழியையும் மருத்துவன் நோயாளியின் நாடி பார்த்தலின் வாயிலாகவே அறிதல் வேண்டும் என்கின்றார் வள்ளுவர். சித்த மருத்துவத்தில் நோய்நாடும் சிறந்தமுறை நாடி பார்த்தலாகும். அது முதன் முதலில் தமிழரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

**நோயாளியின் நிலை அறிதல்:**

'மருத்துவ நூலைக் கற்ற மருத்துவன் நோயுற்றவர்களின் வயது, நோயின் அளவு, காலம் ஆகியனவற்றை ஆராய்ந்து செயல் பட வேண்டும்' என்னும் மருத்துவ முறையைத் திருவள்ளுவர்,

**"உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்"** **(குறள். 949)**

என்னும் குறட்பாவில் வலியுறுத்துகின்றார். 'உற்றான்' என்பதற்கு நோயுற்றவன் என்பதும், 'கற்றான்' என்பது மருத்துவம் கற்றவன் என்பது பொருளாகும். கற்றான் என்பது மருத்துவமுறை களை நன்கு கற்றவன்; நோயாளியை அணுகும் முறைகளையும் நன்கு அறிந்தவன் எனப் பொருள் கொள்ளலாம். நோயாளியையும், நோயையும், நோயின் காலவரையறையையும் மருத்துவன் பல்லாற்றானும் அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும் என்பதே இக்குறட்பாவின் கருத்தாகும்.

**மருத்துவன் எத்தகைய பண்புடையவனாக இருத்தல் வேண்டும்?**

பிறர்க்கு ஏற்படுகின்ற நோயினால் உண்டாகும் துன்பத்தை, தனக்கு ஏற்படும் துன்பம் போலக் கருதும் பண்பு மருத்துவனுக்கு வேண்டும். இதனை வள்ளுவர் 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில்,

**"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**

**தந்நோய்போல் போற்றாக் கண்ட"  (குறள். 315)**

என்னும் குறட் பாவில் வலியுறுத்துகின்றார். பணம் ஈட்டுவது மருத்துவனின் நோக்கமாக இருத்தல் கூடாது. நோயாளியின் நோய் தீர்த்து அவனது துன்பத்தைப் போக்கும் பண்பு மருத்துவனுக்கு முக்கியம் என்கின்றார் வள்ளுவர்.

**திருவள்ளுவர் சிறந்த மருத்துவர்:**

மருத்துவநோக்கில் திருக்குறளை அணுகும்போது, அளப் பரிய பல மருத்துவக் குறிப்புக்கள் அந்நூலினுள் இடம் பெற்றிருப் பதைக் காண முடிகின்றது. மருந்து (Medicine) என்னும் சொல்லை வள்ளுவர் இன்றைய மருத்துவவியலார் குறிப்பிடும் 'மருத்துவப்புலம்', 'உட்கொள்ளும்மருந்து' என்னும் இரு பொருள்களிலும் ஆண்டுள்ளார். மருந்தே இல்லாத வாழ்வை மனித சமுதாயம் பெற வேண்டும் என விரும்பிய அவர், நோய்களுக்கான மருந்துகளைப் பற்றிய குறிப்புக்களைக் குறிப்பாகவும் சுட்டியுள்ளார்.

'சாவா மருந்து (குறள். 82), 'எவ்வ நோய் தீர்க்கும் மருந்து' (குறள். 1214) 'உறுதுயர் தீர்க்கும் மருந்து' (குறள். 1275), 'பிணிக்கு மருந்து பிற' (குறள். 1102), 'தன் நோய்க்குத் தானே மருந்து' (குறள். 1102), 'நோய் மருந்து' (குறள் 1091) என்பன இதற்குச் சான்றுகளாகும்.

**நோய்கள்:**

திருவள்ளுவர் தம் காலத்து நோய்களை,

1. 'பாரிக்கும் நோய்' தொற்று நோய்கள் (குறள் . 851)
2. 'உய்வில் நோய்' தீராத நோய்கள் (குறள். 1174)
3. 'அதிரவருவதோர் நோய்' அதிர்ச்சியால் வரும் மாரடைப்பு முதலான நோய்கள் (குறள். 429)
4. 'எவ்வநோய்' மன அழுத்தத்தால் வரும் நோய்கள் (குறள். 853)
5. 'சார்தரு நோய்' பரம்பரை நோய்கள் (குறள். 359)
6. 'மையல்' மனநோய்கள் (குறள். 838)

7. 'தீப்பிணி' உடலின் ஆக்கச் சக்தியாகிய கலோரி குறைவதால் வரும் நோய்கள் (குறள். 227)

8. பால்வினை நோய்கள் (குறள். 149)

எனக் கண்டறிந்து கூறியிருப்பதும் கருதத்தக்கதாகும்.

**நோய்க்குக் காரணங்கள்:**

நோய்க்கான காரணங்கள் திருவள்ளுவர்,

1. நோய் பற்றிய அறிவின்மை (குறள். 429)

2. வளி (காற்று), பித்தம், கோழை ஆகியவை குறைதலும் மிகுதலும் (குறள். 941)

3. உணமிகல் (குறள்கள். 943, 946, 947)

4. அளவறிந்து வாழாமை (குறள். 479)

5. உணவின் அளவு குறைதல் அல்லது பசி (குறள். 479)

6. ஒவ்வாத உணவை உண்ணல் (குறள். 945)

7. புலால் உண்ணல் (குறள். 255)

8. சோம்பல், நீண்ட உறக்கம் (குறள். 605)

9. மரபுவழி (குறள். 3500

10. தவறான, தீய நடத்தைகள் (குறள். 320)

11. காமம், வெகுளி, மயக்கம் (குறள். 360)

முதலானவற்றைக் குறிப்பிடுகின்றார். உண்ணும் உணவுப் பழக்க வழக்க அடிப்படையில் நோய் வராமல் தற்காத்துக் கொள்ள முடியும் என்கின்றார் வள்ளுவர். அதற்கு அவர் மாறுபாடு இல்லாத உணவினை உண்ணல் (குறள்கள் 944, 945), தேவையின் அளவறிந்து உண்ணல் (குறள்கள், 943, 947), உண்ட உணவு செறித்தபின் உண்ணல் (குறள்கள். 942, 943, 944, 946), உண்ணா நோன்பிருத்தல் (குறள். 160) முதலான வழிமுறைகளைக் கூறியுள்ளது.

'நோய் நாடல்' (Diagnose) நோய் என்னவென்பதைப் பல்வேறு சோதனை முறைகளில் கண்டறிவது, 'நோய்முதல் நாடல்' (Etiology) நோய்க்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து, 'தணிக்கும் வாய் நாடல்' (Cure) நோய் போக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்து (குறள். 948) ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு மருத்துவர் நோயாளியின் நோயைத் தீர்க்க வேண்டும் என வள்ளுவர் கூறியிருப்பதன் வாயிலாக அவரைச் சிறந்த மருத்துவ ராகக் கொள்ளலாம்.

**மரபணுக்கள்**

மருத்துவ அறிவியலார், ஒருவரின் உடலின் வடிவமும் அவர்தம் பண்புகளும் மரபு வழியாகவும் மரபணுக்கள் வழியாகவும் அவருக்கு வந்து அமைகின்றன என்பர். இம் மரபணுக்கள் தொடர்பான கருத்துக்கள் இன்றைய மருத்துவ அறிவியலில் ஒரு மைல் கல் ஆகும். இச் சிந்தனைகளை வள்ளுவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் மரபணு நிழலைத் திருக்குறளில் காண முடிகின்றது. இதற்குச் சான்றாக,

**"தக்சார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்ச த்தால் காணப் படும்"** **(குறள். 114)**

**"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து'** **(குறள். 112)**

**"மனந்தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்"**
**"குலத்திண்கண் ஐயப்படும்"** **(குறள். 958)**

என்னும் குறட்பாக்களில் மரபணுக் கோட்பாடுகளின் சாயலைக் காணமுடிகின்றது.

**மூலிகை மருந்தும் மருத்துவமும்:**

பழந்தமிழகத்தில் மருத்துவம் நன்கு வளர்ச்சியடைந் திருந்தது. மக்கள் மூலிகைகள் பற்றியும் மூலிகைச் சிகிச்சைகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். தமிழ்ப்புலவர்கள் மூலிகை சார்ந்த மருத்துவ அறிவு பெற்றிருந்ததோடு, தாங்கள் எழுதிய நூல்களின் பெயர்களை மூலிகைப் பெயர்களால் தலைப்பட்டிருந்தனர். மருத்துவ நெறிகளுடன் ஒழுக்க நெறிகளைக் கலந்து கூறியமையால் மக்கள் அவற்றை எளிதாகப் புரிந்துகொண்டு கடைப்பிடிக்க வாய்ப்பு இருந்தன. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியன இவ்வகை *சார்ந்த நன்னெறி* நூல்களாகும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியன கலந்த மருந்திற்குத் 'திரிகடுகம்' என்பது பெயர். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களும் உடல்நோய் போக்கும் சிறந்த மருந்தாகும். இம்மருந்தின் பெயரால் சிறுபஞ்ச மூலத்தை இயற்றிய காரியாசான் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர் ஆவார். அவர் ஆயுர்வேத நூற்பயிற்சியும் வடமொழிப்புலமையும் கொண்டவர்.

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் சிறந்த மூலிகை மருந்தாகும். இம் மருந்துகளின் பெயரால் கணிமேதாவியார் 'ஏலாதி' என்ற நூலைப் பாடியுள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மூலிகை மருந்துகளின் தொகுப்புக் ளைத் தலைப்புக்களாகக் கொண்டவை. இம்மூலிகை மருந்துகளைச் சரியான

முறையில் உட்கொள்வதன் வாயிலாக உடலிலுள்ள நோய்கள் குணமாகி உடல்நலம் பாதுகாக்கப்படுவதைப் போன்று இந்நூல்களில் சொல்லப் பட்டுள்ள நல்லொழுக்க நெறிமுறைக் கோட்பாடுகளை முறையாகப் பின்பற்றினால் துயருற்ற மனமும் ஆன்மாவும் தெளிவடைந்து மனநலமும் ஆன்மீக நலமும் பெறமுடியும்.

**சிறுபஞ்ச மூலத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள நோய்கள்:**

சிறுபஞ்ச மூலத்தில் இடம்பெற்றுள்ள,

**"சிக்கர் சிதடர் சிதலைபோல் வாயுடையார்**

**துக்கர் துருநாமர் துக்குங்கல் தொக்கு**

**வரு நோய்கள்" (சிறுபஞ்ச மூலம், பா.எண். 74)**

என்னும் வெண்பா வரிகளில் பின்வரும் நோய்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

1. சிக்கர் தலைவலி Headache
2. சிதடர் பைத்தியம் பித்து - Insanity
3. சிதலைப்போல் வாயுடையார் - Insanity
4. துக்கர் காசநோய் - Tuberculosis
5. திருநாமர் மூலம் - piles
6. தொக்குவரு நோய்கள் தொத்து நோய்கள்

இந்நோய்கள் அக்கால மக்களிடம் காணப்பட்டமையால், இதற்கான மருத்துவ முறையும், மருந்துகளும் அக்காலத்தில் இருந்தன என்பதை அறிய முடிகின்றது. சிறுபஞ்சமூலம் 'சிதடர்' என்னும் ஒருவகை நோயைச் சிறப்பாகச் சுட்டுகின்றது. தமிழ்க் கலைக்களஞ்சியம் இந்நோயினால் அவதிப்படுபவரைப் பித்தன் என்றும், குருடன் என்றும் குறிப்பிடுகின்றது. ஆனால் குருட்டுத் தன்மை என்பது உடல் ஊனத்தைக் குறிக்கும் சொல்லாகும். இப்பாடலின் பிற வரிகளில் வரும் சொற்கள் யாவும் பலவிதமான நோய்களைச் சுட்டுவதால் 'சிதடர்' என்னும் இச்சொல்லும் 'பித்தன்' என்னும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆதலால் 'சிதடர்' என்னும் சொல் மனநலம் குன்றிப் பித்தன் ஒருவனைக் குறிக்கும் சொல்லாகும். ஒருவனுடைய செல்வ வளத்திற்கும் ஆக்கத்திற்கும் முக்கிய ஆதாரம் மனநலமாகும். இதனை திருவள்ளுவர் 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' (குறள். 457) என்றார். மனநலம் குன்றிய 'சிதடன்' ஒருவனின் நடவடிக்கை இயல்புநிலைக்கு மாறு பட்டிருக்கும். ஆனால் அவனது இயல்பு மீறிய நடவடிக்கையை அவன் உணரமாட்டான். இத்தகைய மனநோயாளி ஒருவன் மணிமேகலையில்

'மையலுற்றோன் (பித்தன்), (மணிமேகலை, 3:105-114) என்று சித்தரிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏலாதியில் குறிக்கப் பெற்றுள்ள நோய்கள்:**

'ஏலாதி' என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூலில்,

**“கரஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வலி கபம்**
**பெருஞ்சிரங்கு பேர் வயிற்றுத்தீ யார்க் கருஞ்சிரம்**
**மாற்ற யு நீட்டவை தீர்த்தார்” (ஏலாதி, பா.எண்.56)**

என்னும் வெண்பாவில் பின்வரும் நோய்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

1. கருஞ்சிரங்கு - Black itch
2. வெண்டொழுநோய் - White leprosy
3. கல்நோய் சிறுநீரகக் கல்லடைப்பு - (vesicle calculus)
4. பெருஞ்சிரங்கு - scabies
5. பெருவயிற்றுத்தீ யானைப்பசி - Elephant Hunger,

வெண்டொழுநோயால் பாதிக்கப்பட்டவரின் உடல் முழுவதும் தோல் வெண்மையாக மாறிவிடும். ஏலாதியில் இந்நோய் பிறசில நோய்களுடன் குறிக்கப்பெற்றுள்ளது. வெண்குட்டம் என்று கூறப்படும். இவ்வெண் தொழுநோய் உடம்பிலுள்ள தோல் சிதையாமல், தோல் முழுவதுமே இயல்புநிறம் மாறி, திட்டுத் திட்டாக வெண்மை படரும் தன்மை கொண்டது (K. Radhakrishnan, 'Siddha medicine for the Skin Diseases", Heritage of the Tamils - Siddha Medicine, IIITS, p. 427). இந்நோய்க்கான காரணங்களும், இந்நோயைத் தீர்ப்பதற்கான மருந்துகளைத் தயாரித்துச் சிகிச்சையளிக்கும் முறைகளும் 'அங்காரகன் அமர்ந்த பாவம்' என்னும் தலைப்பில் அகத்தியரால் (இரா. நிரஞ்சனாதேவி, தென்னிந்திய மருத்துவ வரலாறு, ப.176) விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

ஏலாதியில் கூறப்பெற்றுள்ள கருஞ்சிரங்கு, பெருஞ்சிரங்கு ஆகியன சாதாரணமாகத் தோலின் மேல் எரிச்சலுடன் ஏற்படக் கூடிய தோல் சம்பந்தப்பட்ட நோய்களாகும். ஏலாதியில் குறிப்பிடப்பெற்றுள்ள 'கல்வலி' என்னும் நோய் சிறுநீரகத்தைச் சரியாக இயங்கவிடாமல் அடைத்துக் கொள்ளும் 'கல் அடைப்பு' நோயாகும். உலகின் பிற நாடுகளில் சிறுநீரகக் கல் நீக்கும் அறுவை சிகிக்சை (Lithotomy) மூலம் இந்நோய் குணப்படுத்தப்படுகின்றது. ஆனால் தமிழ்நாட்டின் இந்நோய்

தசமுலாஹரிதகி, கண்டீரா, மண்டுகர வடிகா போன்ற மூலிகை மருந்துகளால் குணமாக்கப்படுகின்றன. ஏலாதியில் கூறப்பட்டுள்ள 'பேர்வயிற்றுத் தீ' என்னும் நோய், பசியுள்ள யானை வேண்டுவதைப் போன்று பெருமள விலான உணவைக்கொண்டும் தீர்க்க முடியாத கடும்பசியினால் ஏற்படும் நோயாகும். இந்நோய் கண்டவரின் வயிற்றில் தீயினால் எரியுண்டது போன்ற கடும் எரியுணர்வு தோன்றி வலியேற்படும். இதன் காரணமாக இந்நோயை யானைத் தீ நோய் என்று மணிமேகலை (மணிமே. 20: 3335) குறிப்பிடுகின்றது.

**ஆசாரக்கோவையில் மருத்துவம்:**

பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவையில் ஒழுக்கத்தினின்று தவறாதவர் அடையும் நன்மைகள் பற்றிக் குறிப்பிடும் வெண்பாவில் நோய் இல்லாதவர் (ஆசாரக்கோவை, பா.எண். 2:2) ஒழுக்கத்தில் தவறாது ஒழுகுபவர் என்னும் கருத்துச் சுட்டப் பட்டிருக்கின்றது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழிக்கேற்ப ஆசாரக்கோவை நோயற்று வாழ்வதற்கான வழிமுறைகளைப் பரவலாகப் பேசுகின்றது.

நீராடும் முறை, ஆடை உடுத்தும் முறை, உண்ணும் முறை, உண்ண வேண்டிய முறை, பிறர்க்குக் கொடுத்து உண்ணல், உண்ணக்கூடாத முறைகள், உண்ணும் போது இனிப்பான உணவு களை முதலிலும், கசப்பான உணவுகளை இறுதியிலும் உண்ணுதல், உண்கலங்களைக் கையாளும் முறை, வாயைத் தூய்மை செய்யும் முறை, நீரைக்குடிக்கும் முறை, படுக்கும் முறை, மலம் மற்றும் சிறுநீர் கழிக்கும் முறை ஆகியனவற்றை மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசாரக்கோவை, இம்முறைப்படி மனிதன் வாழ்ந்தால் மனிதனுக்கு நோய் வராது; மருந்தும் தேவையில்லை என வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். நோயின்மையை வேண்டு பவர் என்ன செய்ய வேண்டும்? என்பதை ஆசாரக்கோவையின்,

**"பாழ்மனையும் தேவ குலனும் சுடுகாடும்**
**ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்**
**தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்**
**நோயின்மை வேண்டுபவர்" (ஆசாரக்கோவை, பா.எண். 57)**

என்னும் வெண்பாவைச் சுட்டிக்காட்டிப் பேசுகின்றது. நோய் வராமல் தடுத்துப் பாதுகாக்க விரும்புபவர் பாழான வீட்டினுள்ளும் கோயிலுள்ளும் சுடுகாட்டுள்ளும் ஊர் இல்லாத இடத்திலுள்ள ஒன்றையான முற்றிய

## ஜனவரித் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் (ஜன.2)



பிரமிள் (ஜன.6)



வெ.சாமிநாத சர்மா (ஜன.7)



தேவநேயப் பாவாணர் (ஜன.15)



கரிச்சான்குஞ்சு (ஜன.17)



ம.பொ.பெரியசாமித் தூரன் (ஜன.20)

கிடுகு வேங்கடராம மூர்த்தி (ஜன.22)



இராமலிங்க அடிகள் (ஜன.30)



அகிலன் (ஜன.31)

பதிப்பாசிரியர்: பேரா. இரா.சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா.இளங்குமரன்

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் திரு. கதிர்மகாதேவன்

முனைவர் திரு. தி.முருகரத்தனம்

முனைவர் திரு. பெ.சுயம்பு

முனைவர் திரு. இ.மறைமலை

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

## மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும் கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ் மொழித்தேர்வு தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும்பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான தமிழ்ச்சங்கத் தேர்வுகள் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு முதல்தாள் 29.01.2016ஆம் நாளன்றும், இரண்டாம் தாள் 30.01.2016ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
Madurai Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, ராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.